பக்கங்கள் 15 + 4

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 பங்குனி 05 திங்கட்கிழமை 18.101.2023 அதிர்வு 231

செட்டிகுளம் பகுதியில்

## யானை தாக்கி முதியவர் பலி!

(கே.வசந்தன்)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வீதியால் சென்றவரை யானை தாக்கியதில் ஒருவர் மரணமடைந்துள்ளார்

04




யாழ். பட்டிமன்ற விவகாரம்:

# பல்கலை நிர்வாகத்திடமும் விசாரணை நடத்த உத்தரவு

## கல்வி அமைச்சால் தொடர் நெருக்கடி

**இன நல்லிணக்கத்துக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான பட்டிமன்றம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டமை தொடர்பில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடமும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் கல்வி அமைச்சு கோரியுள்ளது.**

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற "தமிழ் வேள்வி - 2023" என்ற நிகழ்வில், "ஈழத் தமிழ் சமுதாயத்தில் தற்போது இளைஞர் அமைப்புக்களின் எழுச்சி அவசியமானதா? அவசியமற் றதா ?" எனும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெற்றிருந்தது. இதில் நடுவராகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபரும் சொற்பொழிவாளருமான ச.லலீசன் கலந்துகொண்டிருந்தார்.

04

# கிணற்றில் தவறி விழுந்து இளம் யுவதி பரிதாபச் சாவு



## வவுனியாவில் சோகம்

(கே.வசந்தன்)

வவுனியா, சமனங்குளம் பகுதியில் தோட்டக் கிணற்றில் தவறி விழுந்து இளம் யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று சிதம்பரபுரம் பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

மேற்படி இளம் யுவதி நேற்று மாலை கிணற்று மோட்டரைப் போட்டபோது அதன் குழாய் கழன்றமையால் அதனைப் பூட்ட முயற்சித்தபோது கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளார்.

தொடர்ந்து மோட்டர்

04



# சிறிய செயற்றிட்டங்கள் ஊடாக பெரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம்

## வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், சிறிய செயற்றிட்டங்கள் ஊடாக பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான ரோட்டரி கழகத்தின் தலைவர் தெரிவு மற்றும் பயிற்சி மாநாட்டின் பிரதம விருந்தினராக கலந்துக் கொண்டு உரையாற்றிய போதே ஆளுநர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டார்.

போலியோ தடுப்பு மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் சிகிச்சை உள்ளிட்டசிறந்த சேவைகளை ரோட்டரி கழகம் முன்னெடுத்துச் செல்வது மகிழ்ச்சி அளிப்பதாக ஆளுநர் கூறியுள்ளார்.

வசதிகள் இல்லாத மாணவர்கள் பாடசாலை கல்வியை தவிர்த்து வருகின்றனர். வடக்கு மாகாணத்தில் கற்றல் வசதிகள் இல்லாதவர்களை அடையாளம் கண்டு ரோட்டரி கழகம் உதவ முன்வந்துள்ளது. இந்த செயற்பாடுகள் வரவேற்கத்தக்கன. கல்வியால் முழு சமூகக் கட்டமைப்பையும் மாற்ற முடியும் எனவும் ஆளுநர் கூறியுள்ளார்.

இதேவேளை, நாட்டின் வட முனையில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு பெரிய அளவிலான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியதற்கான தேவை உள்ளது. அதற்கான சிறிய செயற்றிட்டங்களை முன்னெடுக்குமாறும் இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை முன்வைத்துள்ளார்.








# கிழக்கு மாகாண சபையில் ஓரங்கட்டப்படும் முஸ்லிம்கள்!

## இம்ரான் எம்.பி. கவலை தெரிவிப்பு

(அபு அலா)

கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அதிகாரிகளுக்கு எதிரான விரோதப் போக்கு தொடர்ந்து வருகின்றது. கட்டங் கட்டமாக முஸ்லிம் அதிகாரிகள் ஓரங் கட்டப்பட்டு வருகின்றனர். நிலைமை இன்னும் நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அதிகா ரிகள் எவரும் பணி புரிய முடியாத நிலை ஏற்படலாம்.

இவ்வாறு திருகோணமலை மாவட் டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் அச்சம் வெளியிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர் பதவிகளில் இருந்த முஸ லிம் அதிகாரிகள் ஆளுநரால் அகற றப்பட்ட செய்தியை ஏற்கனவே பகிரங் கப்படுத்தியிருந்தேன். இந்த நிலையில் தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவை மூத்த அதிகாரி ஒருவர் எவ்வித பதவியும் வழங்கப்படாது இடமாற்றப் பட்டிருக்கிறார்.

கடந்த காலங்களில் கிழக்கு மாகா ணத்தில் இருக்கும் 5 அமைச்சுக்களில் இரண்டு தமிழ் செயலாளர்களும், இரண்டு முஸ்லிம் செயலாளர்களும், ஒரு சிங்கள செயலாளரும் பணியாற்றி வந்தனர். இந்த மாகாணத்தின் இனச் சமநிலையைக் கருத்தில் கொண்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது கிழக்கு மாகாணத்தில்



எந்த ஒரு அமைச்சிலும் முஸ்லிம் செயலாளர்கள் இல்லை. முதலமைச்சு, சுகாதாரம், வீதி அபிவிருத்தி ஆகிய 3 அமைச்சுக்களிலும் தமிழ் செய லாளர்களும், கல்வி, விவசாயம் ஆகிய இரண்டு அமைச்சுக்களிலும் சிங்கள செயலாளர்களும் கடமை புரிகின்றனர். இது இந்த மாகாணத்தில் வாழும் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித் துவத்தையும் கொச்சைப்படுத்தும் செயற்பாடாகும். எனினும், எந்த அரசியல் தலைமையும் இதனைக் கண்டு கொண்டாதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளராக பணி யாற்றிய சிரேஷ்ட கல்வி நிர்வாக சேவை அதிகாரியின் பதவி பறிக்கப்பட்டு எந்த வித பதவியும் வழங்கப்படாது. அவர் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக் களத்துக்கு உடன் செயற்படும் வண்ணம் இடமாற்றப்பட்டுள்ளார்.

அமைச்சு செயலாளர் பறிப்பு வரி சையில் இது மற்றுமொரு முஸ்லிம் பதவி பறிப்பு சம்பவமாகும். கிழக்கு மாகாணத்தில் சமீப காலமாக அரங் கேற்றப்படும் முஸ்லிம் விரோதப் போக் குகளின் மற்றுமொரு சம்பவம் இது வாகும். இந்த நிலைமை இப்படியே நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகா ணத்தில் முஸ்லிம் அதிகாரிகள் எவரும் பணி புரிய முடியாத நிலைமை ஏற்படுத் தப்படலாம்.

ரணில், ராஜபக்ஷ ஆட்சியில் முஸ் லிம் விரோதப் போக்கு இன்னும் தொடர் கின்றது என்பதற்கு இவை சிறந்த உதாரணங்களாகும். எனவே, கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகம் விழித்தெழ வேண்டிய அவசர நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் தொடர்பாக பேசுவார்கள் என்றெல்லாம் எதிர்பார்க்க முடியாது என்பது இவற்றின் மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

எனவே, முஸ்லிம் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், புத்தி ஜீவிகள், உலமாக்கள் என அனைவரும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் சமூக மயப்படுத் தப்பட வேண்டும். அதன் மூலம் முஸ்லிம் சமூகம் இந்த அநீதிகளுக்கு எதிராக ஒன்றுபடவேண்டும். முஸ்லிம் அதிகாரிகள் பாதுகாக்கப்பட வேண்டும் .– என்றார்.

# மத்திய மாகாண உதவி ஆசிரியர்களுக்கு நியமனங்கள் நாளை வழங்கப்படவுள்ளன

## மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

(மஸ்கெலியா)

மத்திய மாகாண உதவி ஆசிரியர் களின் நியமனங்களை நாளை 19 ஆம் திகதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன் னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுவலெரியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த 14ஆம் திகதி நுவ ரெலியா மாவட்ட செயலாளர் அலுவ லகத்தில் நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதன் போது மத்திய மாகாண உதவி ஆசிரியர்களின் பிரச்சினை தொடர்பாக சபையின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதன்போது அவர்க ளுக்கு உடனடியாக நியமனம் வழங்க வேண்டும் எனவும் இது தொடர்பாக நான் நாடாளுமன்றத்திலும் குரல் எழுப்பினேன் என்றும் தெரிவித்தேன்.

இதன்போது இந்த மாவட்ட அபிவி ருத்தி குழு கூட்டத்தில் கலந்து கொண்டி ருந்த மத்திய மாகாண கல்வி அமைச் சின் செயலாளர் இந்த நியமனங்களை நாளை 19 ஆம் திகதி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அதனை நிச்சயமாக குறித்த திகதியில் வழங்க முடியும் என்பதையும் அவர் அங்கு தெரிவித்தார்.

இந்த ஆசிரியர்கள் 2016 ஆம் ஆண்டு உதவி ஆசிரியர்களாக நியம னம் பெற்று 2019 ஆம் ஆண்டு அவர் கள் தங்களுடைய தகதியை ஆசிரி யர்களாக பூர்த்தி செய்திருந்தனர். இருந்த போதிலும் அவர்களுக்கான நியமனம் பல காரணங்களால் கடந்த 5 வருடங்களாக வழங்கப்படவில்லை.

இன்றைய பொருளாதார நிலைமை யில் ஆசிரிய உதவியாளர்கள் மிகுந்த சிரமத்துக்கு மத்தியிலேயே தங்களுடைய தொழிலையும் வாழ்வாதாரத்தையும் முன்னெடுத்து வருகின்றனர். எனவே அவர்களுடைய நியமனத்தை உடன டியாக வழங்கி அவர்கள் தங்களுடைய தொழிலை சிறப்பாக முன்னெடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விடயத்தை தெரிவித்தோம். இதன் போது மாகாண கல்வி அமைச்சர் எதிர்வரும் 19 ஆம் திகதி நியமனம் வழங்கப்படவுள்ளது என்று தெரிவித் தார்.-என்றார். இந்த விடயத்தை மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே உறுதிப்படுத் தியுள்ளார்.

# வவுனியாவில் பஸ் மோதி முதியவர் ஒருவர் மரணம்

## சாரதி கைது



(கே.வசந்தன்)

வவுனியா, பூவரசங்குளத்தில் பஸ்ஸில் ஏற முற்பட்டவரை பஸ் மோதியதில் சம்பவ இடத்திலேயே அந்த நபர் உயிரிழந்துள்ளார்.

பூவரசங்குளம் சந்தியிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் இன்று காலை இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து தலைமன்னார் நோக்கிப் பயணித்த தனியார் பஸ் குறித்த பஸ் தரிப்பிடத்தில் தரித்து நின்ற சமயத்தில் அந்த பஸ்ஸில் ஏறுவதற்காக வீதியின் மறுபக்கத்திலிருந்து பஸ்ஸின் முன்பக்கமாக வந்த முதியவர் ஒருவர் பஸ்ஸில் ஏற முற்பட்டார். அவ்வேளை பஸ்ஸை சாரதி செலுத்தியமையால் மேற்படி முதியவர் மீது பஸ் மோதி சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பூவரசங்குளம் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தமையுடன் பஸ்ஸின் சாரதியையும் கைது செய்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பஸ்ஸை பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்துக்குப் பொலிஸார் எடுத்துச் சென்றனர்.

இந்த விபத்தில் பூவரசங்குளம், மணியர்குளம் பகுதியைச் சேர்ந்த 76 வயதுடைய சிவக்கொழுந்து வள்ளிப்பிள்ளை என்பவரே உயிரிழந்தவராவார்.

# மருதங்கேணியில் படகு மோதி மாயமான மீனவர் சடலமாக மீட்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவரின் தெப்பம் மீது இனந்தெரியாத படகு மோதியதில் காணாமல் போன மீனவரின் சடலம் நேற்று மாலை கரையொதுங்கியுள்ளது.

மருதங்கேணியைச் சேர்ந்த முத்துச்சாமி தவராசா (வயது 61) என்பவர் 3 நாட்களுக்கு முன்னர் தெப்பத்தில் சென்று மீன்பிடியில் ஈடுபட்டிருந்தார். இதன்போது இனந்தெரியாத படகு ஒன்று தெப்பத்தை மோதியது என்று தெரிவிக்கப்பட்டது. இதில் தெப்பம் கரையொதுங்கியிருந்த நிலையில் மீனவர் காணாமல்போயிருந்தார்.

காணாமல்போன மீனவரைத் தேடும் பணியில் அப்பகுதி மக்களும் கடற்படை சுழியோடிகளும் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், நேற்று மாலை சடலம் மருதங்கேணி கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

சடலத்தை கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் ஜெமில் நேரில் சென்று பார்வையிட்டார்.




சடலத்தின் முகத்தில் காயங்கள் காணப்படுவதால் தடயவியல் பொலிஸாரை அழைத்து தடயங்கள் பெறப்பட்ட பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு நீதிவான் உத்தரவிட்டார்

இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கிணற்றில்...**

இயங்கிக் கொண்டிருப்பதை அவதானித்த அயல் வீட்டார் கிணற்றடிக்குச் சென்று பார்த்தபோது மேற்படி இளம் யுவதி கிணற்றில் விழுந்து இருந்ததை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் யுவதியை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் மரணமடைந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் வவுனியா, சமனங்குளம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய தவரூபன் லக்சிகா என்ற யுவதியே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

**யானை...**

என்று செட்டிகுளம் பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

செட்டிகுளம், மருதமடுப் பகுதியில் நேற்று மாலை வீதியால் பயணித்த முதியவரை அப் பகுதிக்கு வந்த யானை தாக்கியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த மேற்படி முதியவர் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சேர்க்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

செட்டிகுளம், மருதமடுப் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய தனபாலகே அனுர தென்னக்கோன் என்பவரே மரணமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

**பல்கலை...**

அதன்போது இளைஞர்களிடையே இன நல்லிணக்கத்தைக் குழப்பும் வகையில் தமிழ் இளைஞர்களை எழுச்சிகொள்ளத் தூண்டும் வகையில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன என்று கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் கல்வி அமைச்சு, பட்டிமன்ற நடுவரிடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இந்நிலையில், குறித்த பட்டிமன்றம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது என்பது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக நிர்வா கத்திடமும் விசாரணைகளை முன்னெடுக் குமாறும் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பணித்துள்ளது.

# பொலித்தீன் பைகளை பயன்படுத்தாத வாடிக்கையாளர்களுக்கு கொடுப்பனவு

பொலித்தீன் பைகளை பயன்படுத்தாத வாடிக்கையாளர்களுக்கு கொடுப்பனவு வழங்க சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான துறைசார் மேற்பார்வைக்கான நாடாளுமன்றக் குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, வழங்கப்படும் கொடுப்பனவுத் தொகை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக சுப்பர் மார்க்கெட் உரிமையாளர்கள் குழு எதிர்வரும் 21 ஆம் திகதி அழைக்கப்பட்டதாக அதன் தலைவரும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் மான்னப்பெரும தெரிவித்தார்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையை குறைத்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுப்பர் மார்க்கெட்களால் வழங்கப்படும் பொலித்தீன் பைகள் தொடர்பில் முடிவெடுப்பதற்காக சுப்பர் மார்க்கெட் உரிமையாளர்கள், அண்மையில் சுற்றுச்சூழல் இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான நாடாளுமன்றக் குழுவுக்கு அழைக்கப்பட்டனர். அதன்போது இந்த உடன்படிக்கைக்கு வந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.



# அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்குக் கருத்தரங்கு

( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையில் உள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் புதிய பாடத் திட்டமொன்றை அறிமுகம் செய்திருக்கிறது.

அதன் ஒரு அங்கமாகத் திருக்கோவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் மற்றும் மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான கருத்தரங்கு நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நிஷாந்தினியின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி வளவாளராக கலந்து கொண்டார்.

இதில் திருக்கோவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது, புதிய பாடத் திட்டத்துக்கான பாட நூல்களும், பஞ்சாங்கமும் அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு பிரதேச செயலாளரால் வழங்கப்பட்டன.

கலந்து கொண்ட அனைவருக்கும் தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலப் பணிப்பாளர் க.இராஜரெத்தினத்தின் ஏற்பாட்டில் இலங்கை சிவதொண்டர் பேரவை முழுமையாக உணவு சிற்றுண்டிகளை வழங்கியது. இலங்கை சிவதொண்டர் பேரவை ஸ்தாபகர் ந.இளங்கோ இதற்கான அனுசரணை வழங்கினார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வாய்த்ததைப் பிடுங்குவது நட்பு!

இலங்கை விவகாரத்தில் இந்தியா இழைத்து வரும் ஒரு தவறை இப்பத்தியில் நீண்ட காலமாகத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறோம்.

அது - இலங்கைத் தீவில் தனது உண்மையான நண்பன் யார், கபட வேடதாரியான - கரவு மிக்க - எதிர் யார் என்பதை சரியாக அடையாளம் கண்டு அரவணைப்பதில் புதுடில்லி தொடர்ந்து நீண்ட காலமாகத் தவறிழைத்து வருகின்றது என்பதுதான்.

இந்த விடயத்தை ஒட்டி இப்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா பிரஸ்பித்திருக்கின்றார்.

அதுவும் இலங்கையின் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்துக்குச் சென்ற இந்தியத் தூதர், அங்கு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் இது பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்தியா எப்போதும் இலங்கையின் நண்பனாக செயல்படும் என்று இந்திய தூதுவர் உறுதி அளித்திருக்கிறார்.

நல்லது. எது, எப்படி என்றாலும், இந்தியா தனது நெஞ்சில் கையை வைத்து மனசாட்சியுடன் சிந்திக்குமானால், இப்படிக் கருத்துத் தெரிவித்திருக்காது. அப்படிக் கருத்துத் தெரிவிக்க அதன் மனசாட்சியே அதை அனுமதித்திருக்காது.

இப்படி இப்போது கூறுவது போல எண்பதுகளில் இலங்கையின் உண்மை நண்பனாக இந்தியா இருந்திருக்குமானால் - செயல்பட்டிருக்குமானால் - இலங்கை தீவில் பெரும் இரத்த ஆறு ஒடி இருக்காது என்பது திண்ணம்.

தமிழர்கள் தங்கள் இனத்தின் உரிமைக்காக - வாழ்வியலுக்காக - இருப்புக்காக - முன்னெடுத்த போராட்டத்தை ஆயுத வழியில் உசுப்பேத்தி விட்டு, எதிரித் தனத்தை முறுக்கேற்றி, உருக் கொடுத்து, தூண்டிவிட்டு, இந்தத் தீவையே இரத்தக்காடாக்கும் கொடுஞ் செயலில் இந்தியா அப்போது இறங்கி இருக்காது.

இந்தியா தன்னுடைய அயல் தேசங்களில் எதனிடமும் உண்மையான நண்பனாக இருந்ததில்லை.

எப்போதுமே வெறும் வாய்ப் பந்தல் சவடால் பேச்சுத்தான் இந்த நண்பன் வேடம்.

ராஜதந்திரம் என்பதே வாய்ப்பந்தல் நடிப்புத்தானே? ‘உங்கள் தேசத்தைக் குண்டுமாரி போட்டு அழிப்போம்’ என்ற எச்சரிக்கையைக் கூட கைலாகு கொடுத்து, புன்னகைத்தபடி, மெல்லிய சொல்லாடலில் நேரடியாகச் சொல்லும் பசப்பு நடவடிக்கைதானே ராஜதந்திரம்?

அந்த ராஜதந்திரத்தைத்தான் இலங்கை விவகாரத்தில் அன்றும், இன்றும், என்றும் இந்தியா தொடர்ந்து வருகிறது.

உரிமைக்காக கனன்று எழுந்த ஒரு சிறுபான்மை இனத்தின் வாழ்வா, சாவா போராட்டத்தை - பெரும் தியாகங்களினால் கட்டி வளர்க்கப்பட்ட விடுதலை வேள்வியை - தூண்டிவிட்டு, உசுப்பேற்றி, பின்னர் தானும் சேர்ந்து மும்முரமாகச் செயற்பட்டு அழித்த இந்திய ராஜதந்திரத்தின் அணுகுமுறைக்குப் பெயர் ‘நட்பு’ என்பது ஈழத் தமிழர்களுக்கு நன்கு புரிந்த விடயம்.

நண்பன், நட்பு என்ற பெயர்களில் இந்தியா தோளிலும் கைபோடும் தேவைப்படின் காலையும் வாரி விடும்.

தேவைக்கு ஏற்ப வடிவம் எடுப்பதுதான் புதுடில்லியின் திட்டம். போக்கு. பண்பியல்பு.

இதனைத் தமிழர்கள் நன்கு பட்டறிந்து விட்டனர். இலங்கை ஆட்சி பீடமும் கூட அதை நன்கறியும்.

இந்தியாவின் இத்தகைய நேர்மையற்ற அணுகுமுறைகளால் அதன் அயல் தேசங்களில் எல்லாம் அதற்குத் தலையிடி தாராளம்.

ஒவ்வொரு அயல் நாடாக இந்தியாவுக்கு எதிரான வலையில் வரிசையாக விழுந்து வருவது கண்கூடு.

அந்த வரிசையில் கொழும்பும் சீன வலையில் முற்றாக விழுந்துவிடும் பேராபத்து இந்தியாவைத் துணுக்குற வைத்திருக்கிறது.

இலங்கையை வழிக்கு கொண்டுவர சாம, பேத, தான, தண்ட வழிகளில் தான் எடுத்த முயற்சிகள் எல்லாம் தோற்றுப் போன சூழ்நிலையில் இப்போது நட்புறவு வேடம் போடுகிறது புதுடில்லி.

ஆனால் அந்தப் பருப்பு இனியும் கொழும்பிடம் இலகுவாக வேகாது என்பதுதான் நிலைமை.

புதுடில்லியின் அவல - அபத்த - இரண்டுங்கெட்டான் - நிலையை நன்கு புரிந்து கொண்டு, கறப்பதைக் கறந்தெடுக்கும் காரியத்தில்தான் கொழும்பு உஷாராக நிற்கிறது. அதுதான் நடக்கிறது.

அதுதான் இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையான நட்பு உறவு பாந்தயத்தின் சீத்துவம்.



# வரலாற்று நூல் வெளியீட்டு விழா!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் 'மரகதம்' வரலாற்று நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (16) சனிக்கிழமை நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபையின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தொகுத்து எழுதிய இந்த நூல் வெளியீட்டு விழா ஆலய சந்நிதானத்தில் ஆலய தலைவர் கலாநிதி கி. ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது.

ஆன்மீக அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் நீலமாதவானந்தா ஜீ மகராஜ் சுவாமிகளும் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினமும் கலந்து கொண்டனர்.

ஆசியுரையை ஆலய பிரதம குரு ஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் வழங்கினார். வெளியீட்டுரையை நூலாசிரியர் வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்தினார்.

முதல் பிரதியை ஆலய தலைவர் கி.ஜெயசிறில் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் சுவாமிகளுக்கு வழங்கினார். ஏனைய பிரதிகள் அனைவருக்கும் வழங்கப்பட்டன.

நூலுக்கு அனுசரணை வழங்கிய லண்டனில் வாழும் காரைதீவைச் சேர்ந்த ரி.விஜயலதா, ரி.விஜயகரன் சார்பில் அவரது சகோதரர் சி.பிரேமச்சந்திரன் சிறப்புப் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.



# 'வாழ்வு சுமந்த வலி' நூல் வெளியீட்டு விழா!

(அபு அலா )

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கரவை மு. தயாளனின் 'வாழ்வு சுமந்த வலி' நூல் வெளியீட்டு விழா நேற்று (17) திருகோணமலை நகர சபை பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக தீபகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக எழுத்தாளர் நிலாவெளியூர் கெஜதர்மா, ஊடகவியலாளர் ச.திருச்செந்தூரன், வைத்தியர் சி.ஹயக்கிரிவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நூலின் முதல் பிரதியை வைத்தியர் சி.ஹயக்கிரிவன் பெற்றுக் கொண்டார். இந்த விழாவில் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய வட்ட ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நூலின் பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.






# அக்கரைப்பற்றில் விருது வழங்கும் நிகழ்வு!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

அக்கரைப்பற்று அல் பாதிமியா வித்தியாலய மின்னும் தாரகைகள் விருது வழங்கும் நிகழ்வு அதிபர் எம். ஸமீம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில், புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள், இறுதித் தவணையில் தரம் – 3,4,5 வகுப்புக்களைச் சேர்ந்த அதி கூடிய முதல் 5 ஆம் இடம்வரை பெற்ற மாணவர்கள், மாணவ தலைவர்கள், ஆளுமை விருத்திச் செயலமர்வில் பங்குபற்றிய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாக, தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா கலந்து கொண்டார்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி பணிமனையின் அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், நலன் விரும்பிகள், பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.








# கல்முனையில் இன்று நடந்த சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(நூருல் ஹுதா உமர் )

மனித அபிவிருத்தி தாபனமும் பெண்கள் ஒத்துழைப்பு முன்னனியும் இணைந்து கல்முனை இஸ்லாமபாத் பொதுக் கட்டடத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வை இன்று (18) நடத்தின.

வேள்வி பெண்கள் அமைப்பின் உப தலைவி எம். றிலீபா பேகம் தலைமைல் நடைபெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் செயலாளரும், மனித அபிவிருத்தி தாபன நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளருமாகிய திருமதி எஸ். லோகேஷ்வரி கலந்து கொண்டு பிரதான உரை வழங்கினர்.

பெண்கள் அரசியல், சமூக, கலாச்சார மற்றும் அபிவிருத்தி போன்ற வற்றில் சமத்துவமாக செயற்படுவதற் கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் அதற்கு இந்தியாவில் கேரளா மாநிலத் தில் நடைமுறைப்படுத்தப்படும் பஞ் சாயத்து முறையை பின்பற்ற வேண்டும் என்ற விளக்க உரையை வழங்கி னார்.

இந்த நிகழ்வில் மனித அபிவிருத்தி ஸ்தபான உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால், மகளிர் அபிவிருத்தி உத்தி யோகத்தார்கள், அரசியல் செயற்பாட் டாளர்கள் , பெண்கள் அமைப்புகள், சிவில் அமைப்புகளின், இளைஞர் அமைப்புகள் ஆகியவற்றின் முக்கியஸ் தர்கள் கலந்து கொண்டனர்.










# கருத்துச் சுதந்திரம், தகவல் உரிமை மேம்பாடு தொடர்பில் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொதுநலவாய அறக்கட்டளையின் நிதியுதவியுடன் கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் உரிமைகளை மேம்படுத்துவதற்கான புதுமையான இடங்களின் ஒரு பகுதியாக, இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம் ஏற்பாடு செய்திருந்த அரச பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான செயலமர்வில் அம்பாறை தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மக்கள் தொடர்பாடல் அதிகாரிகள் மற்றும் தகவல் துறை அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம ஆரம்பித்து வைத்த இந்த அமர்வில் அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் வி.ஜெகதீசன், விடியல் இணையத்தள பொறுப்பாளரும் வளவாளருமான நிப்தி அலி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# ஒரு வார காலமாக மூடிக் கிடக்கிறது திருக்கோவில் ஆதார வைத்தியசாலை!

**அத்தியாவசிய சேவையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று கலையரசன் எம்.பி. வேண்டுகோள்**

( வி.ரி. சகாதேவராஜா)

கடந்த ஒரு வார காலமாகத் திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப் பகிஷ்கரிப்பால் மூடிக் கிடக்கின்றது.




இதனால் அந்த பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 32 ஆயிரம் தமிழ் மக்கள் வைத்திய சேவையின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவசர சிகிச்சைகளுக்காக அந்தப் பிரதேச மக்கள் கால, நேர, பணம் செலவு செய்து அக்கரைப்பற்று வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலையில் உள்ளனர்.

ஒரு வாரத்துக்கு முன்பு மரதன் ஓடிய ஒரு மாணவனின் இறப்பைத் தொடர்ந்து அங்கு வைத்தியசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதன் போது வைத்தியசாலையின் கண்ணா டிகள், பெயர் பலகைகள் உடைக்கப்பட்டன.

இதனை அடுத்துத் தங்களுக்குப் பாதுகாப்பின்மை என்று கூறி வைத்தியர்கள் வெளியேறினார்கள்.

அன்றிலிருந்து இன்று (18) திங்கட்கிழமை வரை ஒரு வார காலமாக வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. அங்கு எவ்விதமான வைத்திய சேவைகளும் இடம்பெறவில்லை.

இந்த குறிப்பிட்ட காலப்பகுதியில் பாம்புக் கடி, தூக்கிட்டு தற்கொலை முயற்சி போன்ற பல நோயாளிகள் வந்தும் அவர்கள் நேரடியாக அக்கரைப்பற்று ஆதர வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் வைத்தியசாலை மீள திறக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட பல அமைப்புகள் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் தெரிவிக்கையில்,

நான் மறுநாளே அங்கு பயணித்து வைத்திய அத்தியட்சகர், பெலிஸார் மற்றும் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் ஆகியோரோடு தொடர்பு கொண்டு நிலைமையைத் தணிக்க முயற்சித்தேன். வைத்திய சாலையை மீளத் திறக்க முயற்சிகளை மேற்கொண்டோம்.

பின்பு பொலிஸாரின் பாதுகாப்பு கோரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் பேசி வைத்தியசாலைப் பாதுகாப்புக்குப் பொலிஸாரை அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை அரச வைத்தியர்கள் சங்கம் தங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மாணவனின் மரணம் மற்றும் ஆர்ப்பாட்டம் தொடர்பாக திருக்கோவில் பொலிஸார் வலயக் கல்வி அலுவலகம் மற்றும் வைத்தியசாலை வட்டாரங்களில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

இருந்தபோதிலும் கடந்த ஒரு வாரமாக வைத்திய சேவை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.-என்றார்.

# பாரதி தமிழ் வித்தியாலய இரு மாணவிகள் சாதனை!

(அபு அலா)

தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டியில்கிழக்கு மாகாண திருக்கோணமலை மாவட்ட பாரதி தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவிகள் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றுச் சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.



தேசிய மட்ட வரலாற்று சாதனையை நிலை நாட்டிய தரம் 8 வகுப்பைச் சேர்ந்த த.பிளசியா இரண்டாம் இடத்தையும், தரம் 7 வகுப்பைச் சேர்ந்த சீ.அஸ்வினி ஆறாம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இந்த மாணவர்களை வழிப்படுத்திய அதிபர் சுஜந்தினி யுவராஜா மற்றும் ஆசிரியர்களான அ.அலெக்சாண்டர், திருமதி பா.ரோஷினி ஆகியோர்களுக்குப் பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இரு மாணவிகளும் இந்தச் சாதனையை படைத்துள்ளனர். அதன் பெறுபேறுகள் இந்த மாதம் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மாந்தை மேற்கு பிரதேசத்தில் மாபெரும் இரத்ததான முகாம்

**(மன்னார்)**

மாந்தை மேற்கு பிரதேச செயலகம் மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் இரத்ததான முகாம் இன்று (18) திங்கட்கிழமை காலை முதல் மதியம் வரை மாந்தை மேற்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கே.அரவிந்தராஜ் தலைமையில் இடம்பெற்ற இரத்த தான முகாமில் மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையின் இரத்த வங்கி பிரிவினர் கலந்து கொண்டனர்.

இதன் போது மாந்தை மேற்கு பிரதேச செயலக அலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.





# மாணவர்களுக்குப் பாடசாலைப் பைகள்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

தமிழ் ஒப் லங்கா உதவும் கரங்கள் அமைப்பினர் மத்திய மாகாணத்தின் தெல்தெனிய கல்வி வலயத்திலுள்ள றங்கல நாவலர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 154 மாணவர்களுக்கு பாடசாலைப் பைகளையும் பாட சாலையின் பயன்பாட்டுக்கு ஒலிபெருக்கி சாதனங்களையும் அன்பளிப்புச் செய்தனர்.

பாடசாலை அதிபர் எஸ்.பால சுப்ரமணியம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ் ஒப் லங்கா உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் எஸ்.இளந்தீபன், தெல்தெனிய – மெததும்பர கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நீதிராசா, ஊடக வியலாளர் செல்லையா பேரின்பராசா, ஞா.தயாளன், றங்கல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.





# ஆளுநர் பதவியிலிருந்து தமிழிசை இராஜினாமா; தேர்தல் அரசியலில் மீண்டும் களமிறங்குகின்றார்



தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் பதவிகளை தமிழிசை சவுந்தரராஜன் இராஜினாமா செய்துள்ளார்.

தெலுங்கானா ஆளுநராகவும், புதுச்சேரி துணை நிலை ஆளுநராகவும் தமிழிசை சவுந்தரராஜன் பணியாற்றி வருகிறார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு மக்களவை தேர்தலில் தூத்துக்குடி தொகுதியில் தி.மு.கவின் கனிமொழியை எதிர்த்து போட்டியிட்டார். கனிமொழியிடம் சில லட்சங்கள் வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற்ற பின் 2019 ஆம் ஆண்டு செப்டம்பரில் தெலுங்கானா ஆளுநராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 2021 பெப்ரவரியில் புதுச்சேரி துணை நிலை ஆளுநராகவும் தமிழிசை கூடுதலாக நியமிக்கப்பட்டார்.

இரு மாநிலங்களில் ஆளுநராக பணியாற்றி வந்த நிலையில், மக்களவை தேர்தலில் போட்டியிடும் வகையில் தமிழிசை ஆளுநர் பதவியை ராஜினாமா செய்யக்கூடும் என்று ஏற்கெனவே பேச்சுக்கள் எழுந்தன.

அது பற்றிய கேள்விக்கு தமிழிசை, "ஆளுநர் பதவியை நான் இராஜினாமா செய்ய உள்ளேன் என்பது தவறான செய்தி. கட்சி மேலிடம் என்ன உத்தரவிடுகிறதோ அதைத்தான் நான் செய்து வருகிறேன். எப்போதும் மக்களுக்காக நான் இருப்பேன். பிரதமர் மோடி மற்றும் ஸ்ரீராமரின் தயவால் நான் எனது மனசாட்சிப்படி பணியாற்றி வருகிறேன். எனவே ஆளுநர் பதவியை இராஜினாமா செய்வேன் என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று விளக்கமளித்தார்.

இந்த நிலையில், தான் இன்று தமிழிசை ஆளுநர் பதவியை இராஜினாமா செய்துள்ளார். தனது இராஜினாமா கடிதத்தை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவுக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

மக்களவை தேர்தலில் தூத்துக்குடி, நெல்லை அல்லது புதுச்சேரியில் தமிழிசை போட்டியிடலாம் என்று பேசப்படும் நிலையில் அவரது இராஜினாமா கடிதம் கவனத்தை பெற்றுள்ளது.

# பிரதமரின் வருகை தமிழகத்துக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது

## அமைச்சர் எல்.முருகன் கருத்து



பிரதமரின் வருகை தமிழக மக்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது என மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்தார்.

கோவை விமான நிலையத்தில் இன்று காலை செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"கோவையில் பிரதமர் கலந்து கொள்ளும் பிரம்மாண்ட 'ரோட் ஷோ' நிகழ்வு நடக்கிறது. மக்களின் பேராதரவுடன் கடந்த ஐந்து நாள்களாக பிரதமர் மோடி தென்னிந்தியா முழுவதும் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வருகிறார். நாளை சேலத்தில் பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

கடந்த ஒரு வாரமாக தென்னிந்தியா முழுவதும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறோம். பிரதமரின் வருகை தமிழகத்தில், பா.ஜ.கவுக்கு மிகப் பெரிய ஊக்கத்தை தந்திருக்கிறது. தமிழ் மக்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக சிறந்த நல்லாட்சியை பிரதமர் வழங்கி வருகிறார். இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வது தான் பிரதமரின் ஒரே எண்ணமாக இருக்கிறது. அடுத்த 25 ஆண்டுகளுக்கு வளர்ச்சியடைந்த பாரதம் என்ற நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். பா.ஜ.கவுக்கு தமிழகத்தில் ஆதரவு இருப்பதை காண முடிகிறது.

தேசத்தின் வளர்ச்சிக்கு யார் காரணம் என்றும், தேசத்துக்கு எதிரானவர்கள் யார் என்பதும் தெரியும். தி.மு.க. அவர்களின் அமைப்புகளை ஏவி விட்டு தான் தேர்தல் பத்திரங்களை பெற்றனரா?. ஊழல் குறித்து பேசுவதற்கு தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் தகுதியற்றவர்கள்.

நீலகிரி தொகுதியில் அதிகமான வேலைகளை செய்திருக்கிறோம். மக்களவைத் தேர்தலில் அந்த தொகுதியில் போட்டியிட கட்சி தலைமை கூறினால் அதன்படி செயல்படுவேன்." – என்றார்.

# தமிழ்நாடு, கர்நாடகா, தெலுங்கானாவில் என்.டி.ஏ. கூட்டணிக்கு அமோக ஆதரவு

## பிரதமர் மோடி தெரிவிப்பு



தெலுங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு எந்த மாநிலமாக இருந்தாலும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு (என்.டி.ஏ) மக்கள் மத்தியில் அமோக ஆதரவு இருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இன்று பிரதமர் மோடி தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"நான் இன்று ஜக்டியால், ஷிவ் மோகாவில் பிரச்சாரம் செய்கிறேன். மாலை கோவையில் வீதிப் பேரணியில் பங்கேற்கிறேன். தெலுங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு எந்த மாநிலமாக இருந்தாலும் என்.டி.ஏவுக்கு பலத்த ஆதரவு இருக்கிறது" என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக நேற்று, ஆந்திர மாநிலம், பல்நாடு மாவட்டம் சிலகலூரி பேட்டாவில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் நேற்று தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, தெலுங்கு தேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு மற்றும் ஜனசேனாகட்சி தலைவர் பவன் கல்யாண் ஆகியோர் ஒரே மேடையில் பிரச்சாரம் செய்தனர்.

தொடர்ந்து இன்று கர்நாடகாவின் சிவமோகாவில் பிரதமர் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார். இன்று மாலை அவர் தமிழகம் வருகிறார். 2024 தொடங்கியதில் இருந்து பிரதமர் தமிழகம் வருவது இது 6வது முறை. கோவையில் ரோடு ஷோ, சேலத்தில் நாளை பொதுக்கூட்டம் என பிரதமர் பங்கேற்கிறார்.

தென் மாநிலங்களைக் குறிவைத்து பிரதமர் சூறாவளி சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளும் சூழலில், தெலுங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு எந்த மாநிலமாக இருந்தாலும் என்.டி.ஏவுக்கு அமோக ஆதரவு இருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்

# பா.ஜ.கவை விட இந்தியாவுக்கு பெரிய அச்சுறுத்தல் இல்லை

## மும்பையில் முதல்வர் ஸ்டாலின் உரை



இந்தியாவின் மிகப்பெரிய அச்சுறுத்தல் பா.ஜ.கதான் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதனை ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை நீதி நடைபயண நிறைவு விழா மற்றும் இண்டியா கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்ற பொதுக் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, இந்திய ஒற்றுமை நீதி நடைபயணத்தை கடந்த ஜனவரி 16 ஆம் திகதி மணிப்பூர் மாநிலத்தில் தொடங்கினார். மேற்கு வங்கம், உத்தர பிரதேசம் வழியாக இந்த பயணம் மும்பையில் நேற்று நிறைவடைந்தது.

இதனை முன்னிட்டு இண்டியா கூட்டணியன் அங்கம் வகிக்கும் பல்வேறு கூட்டணிக் கட்சி தலைவர்கள் பங்கேற்ற பொதுக்கூட்டம் மும்பையில் உள்ள சிவாஜி பூங்காவில் நடைபெற்றது. இதில் தி,மு,க, தலைவரும், முதல்வருமான ஸ்டாலின் பங்கேற்றார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"ராகுல் காந்தியின் இந்த நடை பயணம் தெற்கில் குமரியில் இருந்து தொடங்கியது. இந்தப் பயணம் இன்று மும்பையை எட்டியுள்ளது. இந்திய ஒற்றுமை நீதி நடைபயணத்தின் அசல் வெற்றி பா.ஜ.கவை வீழ்த்தி டில்லியில் கூட்டாட்சி அமைப்பதில்தான் உள்ளது.

இது காங்கிரஸ் அல்லது ராகுல் காந்தி என்ற தனி மனிதனுக்கான பயணம் அல்ல. ஒட்டுமொத்த இந்தியாவுக்கான பயணம். இந்தியாவை மீட்டெடுக்கும் பயணம். இந்த பயணத்தில் திரண்ட கூட்டத்தை கண்டு பா.ஜ.க. அச்சம் கொண்டுள்ளது. 'இந்தியா' என சொல்வதை பா.ஜ.க. தவிர்த்து வருகிறது. விரைவில் பா.ஜ.க. ஆட்சியில் இருந்து அகற்றப்படும்.

இந்திய தேசத்துக்கு பா.ஜ.கவை விட பெரிய அச்சுறுத்தல் இருக்க முடியாது. பிரதமர் நரேந்திர மோடி, தனது 10 ஆண்டுகால பதவிக்காலத்தில் செய்தி இரண்டே காரியம் வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் பொய் பிரச்சாரம் மேற்கொள்வதாக மட்டுமே இருந்தது. இதற்கு நாம் விடை கொடுக்க வேண்டும்." - என்றார்.

# 3ஆம் உலகப்போர் ஏற்படும்; ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை




"அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளும் – ரஷ்யாவும் நேருக்கு நேர் மோதினால் மூன்றாம் உலகப் போர் ஏற்படும். ஆனால், அத்தகையச் சூழலை இங்கு யாரும் விரும்பவில்லை."

– இவ்வாறு மீண்டும் ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ள விளாடிமிர் புடின் தனது வெற்றி உரையில் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுகிறது. இந்த நிலையில், ரஷ்யாவின் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது.

இந்தத் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி புடின் சுயேட்சையாக போட்டியிடும் சூழலில் ரஷ்ய கொம்யூனிஸ்ட் கட்சி, தேசிய சுதந்திர ஜனநாயக கட்சி, புதிய மக்கள் கட்சி ஆகியவை களம் இறங்கின. முதன்முறையாக ரஷ்ய வரலாற்றில் மூன்று நாள்கள் வாக்குப்பதிவு நடந்தது.

இந்த நிலையில், ஜனாதிபதி தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று ரஷ்ய வரலாற்றில் ஸ்டாலினுக்குப் பிறகு தொடர்ச்சியாக 3 ஆவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் வெற்றி என்ற சாதனையை புடின் படைத்துள்ளார். 200 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஒரு சாதனையை புடின் செய்துள்ளார்.

தேர்தலில் மெகா வெற்றியைப் பெற்றிருக்கும் புடின் ஆற்றிய முதல் உரையில்,

"அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளும் – ரஷ்யாவும் நேருக்கு நேர் மோதிக் கொள்வது என்பது இந்த உலகம் மூன்றாம் உலகப் போரை எதிர்கொள்வதற்கு வெகு அருகில் நிற்கிறது என்று அர்த்தம். அத்தகைய சூழலை எவருமே விரும்பமாட்டார்கள். ஆனால், இந்த நவீன உலகத்தில் எதுவும் சாத்தியமே.

ஆனால் உக்ரைனில் நேட்டோ படைகள் உள்ளன. அவற்றில் ஏற்கெனவே ஆங்கிலம் பேசும் வீரர்களும், பிரெஞ்சு பேசும் வீரர்களும் உள்ளனர். அவர்கள் அங்கே கொத்து கொத்தாக மடிந்து கொண்டிருக்கின்றனர். சம்மபந்தப்பட்ட நாடுகள் தங்கள் வீரர்களை திரும்பப் பெற்றுக் கொள்வது நலம்.

சிறையில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸ் நவல்னியை நான் விடுதலை செய்யவே விரும்பினேன். ஆனால், அவர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தார். மேற்கத்திய நாடுகளின் சில சிறைகளில் இருக்கும் ரஷ்யக் கைதிகளுக்கு மாற்றாக நவல்னியை விடுவிக்க ஒப்புக் கொண்டிருந்தேன். அவரது மறைவு எதிர்பாராதது.

ஆனால் அதை சிலர் விமர்சிக்கின்றனர். அமெரிக்கச் சிறைகளில் இதுபோன்ற இறப்புகள் நேர்ந்ததே இல்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் நேர்ந்திருக்கின்றன. அமெரிக்காவில் ஜனநாயகம் இல்லை. அங்கே இப்போது மிகப்பெரிய குளறுபடியான சூழல் மட்டுமே நிகழ்கிறது. நிலவரம் அப்படியிருக்க அவர்கள் ரஷ்ய தேர்தல் நியாயமாக நடத்தப்படவில்லை என்று போலி குற்றச்சாட்டுகளை முன்வைப்பது நகைப்புக்குரியது." – என்றார்.



# காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பலி

காசாவில் உள்ள அல்–ஷிஃபா மருத்துவமனையை இஸ்ரேலிய படைகள் சுற்றிவளைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக, அல்–ஷிஃபா மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சை பிரிவில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு குண்டு வீச்சு தாக்குதல்களும் மேற்கொண்டுள்ளப்பட்டுள்ளன.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பல சிறுவர்கள் ஊட்டச்சத்து குறைப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற விபத்தில் 21 பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தானின் ஹெல்மண்ட் நகரில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

பஸ் , உந்துருளி மற்றும் எரிபொருள் கொள்கலன் ஆகியன மோதி கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், இந்த விபத்தில் சிக்கி 38 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.






# அமெரிக்காவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலி

அமெரிக்காவின் வடக்கு பிலடெல்பியா புறநகர் பகுதியான லெவிட்டவுனில் உள்ள ஒரு வீட்டுக்கு முன் இளைஞரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் போது, மேற்படி இளைஞர் அங்கிருந்த 55 வயது பெண் மற்றும் 13 வயது சிறுமி ஆகிய 2 பேரை சுட்டுக்கொன்ற பின்னர் வீட்டில் இருந்து வெளியே வந்து மேலும் ஒரு பெண்ணை சுட்டுக் கொன்றுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து தகவலறிந்து பொலிஸார் தப்பி ஓடிய இளைஞரை பிடிக்க நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இந்த நிலையில் நியூ ஜெர்சி நகரில் மறைந்திருந்த அந்த இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் பொலிஸாரின் விசாரணையில் அவர் ஆண்ட்ரே கார்டன் (வயது 26) என்பதும் அவர் தனது வளர்ப்புத் தாய் மற்றும் சகோதரியை சுட்டுக் கொன்றுள்ளார் எனவும் தெரிய வந்துள்ளது.

டிராண்டன் பகுதியில் கார் ஒன்றை திருடிய அந்த இளைஞன் லெவிட்டவுன் பகுதிக்கு சென்று தனது உறவினர்களை சுட்டுக் கொன்றுள்ளார் என கூறப்படுகின்றது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பக்கங்கள் - 4

கனடா முரசு

திங்கட்கிழமை 18/03/2024

## அதிக வெப்பநிலையுடனான குளிர்காலம் இந்தத் தடவை

பிரிட்டிஷ் கொலம்பியா, மார்ச் 18

77 வருடங்களின் பின்னர் வரலாற்றில் முதன் முறையாக அதிக வெப்பநிலையுடனான கனடாவின் குளிர்காலமாக இந்த குளிர்காலம் பதவாகியுள்ளது.

C2




### கனடா தலைநகரை உலுக்கிய படுகொலைகள்:

# அறுவரின் இறுதி அஞ்சலியும் ஒட்டாவாவில் நேற்று ஒன்றாக

### நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று கூடினர்



ஒன்ராரியோ, மார்ச் 18

கனடாவின் தலைநகரை உலுக்கிய படுகொலை சம்பவத்தில் உயிர்நீத்தவர்களுக்கான இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்று ஒட்டாவாவில் இடம் பெற்றது.

நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று கூடி இவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

படுகொலை செய்யப்பட்டவர்களின் உடல்கள் இலங்கைக்கு அனுப்பப்படும் என ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்ட போதிலும், இறுதிக் கிரியைகளை ஒட்டாவிலேயே நடத்துவதற்கு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் தீர்மானித்தமையையடுத்து, ஒட்டாவாவில் அமைந்துள்ள இன்பினிட்டி கொன்வென்ஷன் சென்ரறில் நேற்று மார்ச் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று இந்த இறுதி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

C2






**அறுவரின் இறுதி...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இறுதி அஞ்சலி நிகழ்வில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மற்றும் யூத மதத் தலைவர்கள் கலந்துகொண்டு பிரார்த்தனைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன், வேறுபாடு எதுவுமின்றி அனைத்து சமுதாயங்களையும் சேர்ந்தவர்கள் நூற்றுக்கணக்கில் வருகை தந்து உயிரிழந்தவர்களுக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

அத்துடன், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரும் இந்த அஞ்சலியில் நேரலையாக கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளையும் இறுதி அஞ்சலி நிகழ்வுகளை முன்னின்று ஒழுங்கு செய்த கனடிய பௌத்த பேரவை செய்திருந்தது.

இந்த நிகழ்வில் கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் இரங்கல் செய்தி வாசிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பத்தினருடன், கனடாவும், கனடா மக்களும் எப்போதும் உறுதுணையாக இருப்பார்கள் என பிரதமர் தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

கனடாவுக்கான இலங்கை உயரஸ்தானிகர், பூர்வீகக் குடிகள் நலன்பேண் அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி, ஒட்டாவா தொகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரா ஆர்யா, ஒட்டாவா மேயர், மாநிலங்களவை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோரும் இந்த இறுதி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.







**அதிக வெப்பநிலையுடனான...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, வசந்த காலம் ஆரம்பிப்பதற்கு முன்னரேயே, கோடை காலத்தின் ஆரம்பத்தினைப் போன்ற வானிலையை பிரிட்டிஷ் கொலம்பியா பதிவு செய்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் பல பகுதிகளில் கடந்த வார வானிலையானது, 23.6 பாகை செல்சியஸ், 23. பாகை செல்சியஸ், 21 பாகை செல்சியஸ் எனப் பதிவாகியிருந்தது.

பொதுவாக இவ்வாறான காலநிலை வசந்தகாலத்தின் இறுதியிலேயே பதிவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.




# வரலாற்று முக்கியத்துவச் சிறப்புமிக்க கட்டடம் டொரன்டோவில் தீக்கிரை!

ஒன்ராரியோ,மார்ச்18

டொரன்டோவில் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற தீ விபத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடம் ஒன்று தீக்கிரையாகியுள்ளது.

டொரன்டோவின் வோர்ட்ஸ் ஐலன்ட் அசோஷியேசன் கிளப்ஹவுஸ் கட்டடமே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

ஞாயிற்றுகிழமை அதிகாலை 2.20 அளவில் தீ விபத்து குறித்து தகவல் கிடைத்து, தீயணைப்புப் படையினர் சம்பவத்திற்கு இடத்திற்கு விரைந்த போதிலும், ஏற்கனவே தீ முழுவதுமாக பரவிவிட்டதால் கட்டடத்தை காக்க முடியாமல் போயுள்ளது.

எனினும், இந்த சம்பவத்தினால் எவரும் காயமடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வசந்தம் ஆரம்பிக்கும் நிலையில் நாளை குளிரான காற்று வீசுமாம்


**ஒன்ராரியோ, மார்ச் 18**

கனடாவில் வசந்தகாலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில், மார்ச் மாதம் 19ஆம் திகதி குளிரான காற்று நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மார்ச் 19ஆம் திகதி செவ்வயாக் கிழமையன்று ஒன்ராரியோவில் வசிப்பவர்கள் அனைவரும் மீண்டுமொரு முறை குளிர்கால ஆடைகளை அணிந்துகொண்டு வெளியில் செல்ல நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும் ஏரிகளில் அருகில் ஏற்படும் வானிலை மாற்றமானது வசந்த கால வானிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி, குளிர் காற்றிற்கு வழிகோலுவதுடன், பனிப்பொழிவுக்கான சாத்தியங்களும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கடும் பனிப்பொழிவு காரணமாக ஒன்ராரியோவின் தென்பகுதியில் அடுத்து சில நாள் களுக்கு போக்குவரத்துக்கு தடை ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.






# வயதான தனிநபர்களை குறிவைத்து மோசடியில் ஈடுபட்ட ஒருவர் கைது!

பிரிட்டிஷ் கொலம்பியா, மார்ச் 18

கனடா முழுவதும் வயதான தனி நபர்களை குறிவைத்து செய்யப்படும் மோசடி தொடர்பாக டொராண்டோ நபர் ஒருவர் மீது பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பீல் பிராந்திய பொலிஸாரின் கூற்றுப் படி, பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் ஜுன் 2023 இல் தெரியாத தொலைபேசி எண்ணிலிருந்து குறுஞ்செய்திகளைப் பெறத் தொடங்கினார்.

அந்த நபர் தன்னை ஒரு குடும்ப உறுப்பினர் என்றும், தங்களின் தொலைபேசி சேதமடைந்ததால் நண்பரின் தொலைபேசியைப் பயன்படுத்துகிறார் எனவும் கூறினார்.

மோசடி செய்பவர் குடும்ப உறுப்பினரிடம் செலுத்தப்படாத பில் இருப்பதாகக் கூறி பணத்தை அனுப்புமாறு கோரினார். பாதிக்கப்பட்டவர், மின்னஞ்சல் முகவரிக்கு ஆயிரக்கணக்கான டொலர்களை மாற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் வசித்த இரண்டாவது பாதிக்கப்பட்டவர் அவர்களின் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

39 வயதான சார்லஸ் ஜுனியர் கிளீவ்லேண்ட் கிங் என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர் விசாரணை தொடர்பாக மார்ச் 13 அன்று காவலில் வைக்கப்பட்டார்.




## மிசிசாகா விபத்தில் பாதசாரி படுகாயம்!

ஒன்ராரியோ, மார்ச் 18

மிசிசாகா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பாதசாரி ஒருவர் கடும் காயமடைந்துள்ளார்.

வாகனத்தில் சென்ற ஒருவரால் தாக்கமேற்பட்டு பாதசாரி ஒருவர் காயமடைந்தார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் இந்த சம்பவம் குறித்து தமக்கு தகவல் கிடைத்ததாகவும், சம்பவத்தில் காயமடைந்த நபர் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும் ஒன்றாரியோ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தரப்பத்தில் சம்பவத்தில் காயமடைந்த நபர் குறித்தும் எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

## ஸ்கார்பரோ வீதி விபத்தில் சாரதி ஒருவர் காயமுற்றார்


ஒன்ராரியோ,மார்ச்18

ஸ்கார்பரோ பகுதியில் வீதி விபத்தில் சிக்கி சாரதி ஒருவர் காயமடைந்துள்ளார்.

எனினும், விபத்திற்குள்ளானவரின் உடல்நிலை தேறி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஞாயிற்றுக் கிழமை இர்வு 7.30 மணியளவில் தமக்கு இந்த சம்பவம் தொடர்பாக அறியக் கிடைத்தாக டொரன்டோ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்திற்குள்ளாக்கி சாரதியின் விவரங்கள் இதில் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.




## அல்பேர்ட்டாவில் குளிர் காலத்திலும் இரட்டை இலக்க வெப்பநிலை பதிவு

### கோடை காலம் குறித்த அச்சத்தை அது தருகிறது

**அல்பேர்ட்டா, மார்ச் 18**

அல்பேர்ட்டாவில் இரட்டை இலக்க வெப்பநிலை பதிவானது கோடை காலம் குறித்த அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

அல்பேர்ட்டாவில் குளிர் காலத்தின் இறுதி காலப்பகுதியில் தொடர்ச்சியாக இரட்டை இலக்கத்தில் வானிலை பதிவாகி வருகின்றது.

இந்த வாரத்தின் நடுப்பகுதி வரை இந்த வானிலை தொடருவதால், வாரத்தின் பிற்பகுதியில் மீண்டும் குளிர்கால வானிலை ஏற்படக் கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதனால், இந்த வாரத்தின் இறுதி நாள்களில் கடும் பனிப்பொழிவினை எதிர்பார்க்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குளிர்ந்த காலநிலையைத் தோற்றுவிக்கும் அதே காற்று, பனிப்பொழிவுக்கு காரணமாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.